ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவல்லிக்கேணி

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்பேரிற்

பலசரக்குலாலிபாட்டு.

இவை,

திருத்தணிகை,

செங்கல்வராயசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

தக்கோலம்

இராமசாமிநாயுடு

அவர்களால் தம்து

சென்னை ஜூளை விஜயவிக்னேஸ்வரர்கோவில்

வீதி 71 - வது கதுவிளக்கமுள்ள

கிரகத்தில் ஸ்தாபித்திருக்கும்.

ஸ்ரீலட்சுமிநாராயணவிலாசஅச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.



ஸ்ரீராமஜெயம்.

பலசரக்கு ஏலப்பாட்டு.

வெண்பா,

அண்டர்துயர்களைய அவதரித்தீரிப்புவிதனிலும்
எண்டிசையோரும்போற்று மீசனே—மண்டலத்தி
லறியேனின்மேலேலப் பாட்டுரைக்க வெங்கோவே
சிறியேன் மனதைத்திருத்து,

ஏலேலோ குருபாதம்—அம்பாள்
ஏலேலோ குருபாதம்.

விநாயகனே முன்னடவாய்—நான்முகன்றன் சர
ஸ்வதியே—எந்த நாவிலுள்ளே வாரும்மா—சீர்பொ

ழியுந் திருவல்லிக் கேணியெனும் புரிதனிலே வாசமா கவீற்றிருக்கும்—பார்த்த சாரதியுந் தேவியுடன்=வே தவல்லித்தாயார்க்கு—கப்பல் காணிக்கைகள் வெகு விதமாய்ப்—பாரமுடன் சரக்குக் கட்டி—யோடிவரு ஞ்சென்னதிக்கே,

(ச ரூ ர்)

நாழிகையொன்றுக்குநாலூறுகப்பல் நாடோறு ந்தப்பாமல் தினம்வந்திறங்கும் சீருடையபடித்துறைக் கு கப்பல்வருஞ்சேதி சென்னப்பட்டணங்கோட்டை சென்கனெல்லாங்கேட்டுப் பூரித்து ஆனந்த சந்தோ ஷமாகப் புதுமைகள் பார்க்கவந்து கரைதனிலே நிற்க பாரியவர்த்தகர்கள்செட்டிகோமுட்டி பட்டணத்திலு ள்ளகுடி யின்னஞ்சிலபேர்கள் வேணுமென்றசறக்கு கள்-வேணபடிக்கொள்ளமாட்டதனில் பணங்கொணர் ந்து வந்தவர்களிங்கே பேரான்பேர்பெற்ற சென்னைபுரி யாளும் பெரியதுரைசின்னதுரை யெல்லோருங்கேட் டு, நாடாளுமிங்கிலீஷ் கொடிக்காரரெல்லாம் நாலாயி ரஞ்செனங்கள்வந்துமேநிற்க ஓடாததண்ணீரில் லங்க ர்கள்பாய்ச்சி யொருபுரமாய்கப்பலெல்லாங் கரைதனி லேசேர்க்கவேதவல்லித்தாயார் கடாட்சத்திலேலேவே கமுடன்கப்பல்வந்துசேர்ந்ததையாசுவாமி ஏலேலோ

பொங்கிவருங் கடலோரங்—தாயார் பூமகளாரு சந்நிதிக்கே—மங்களமாய சரக்குகப்பல்—இங்கே வந திறங்கும்படித்துறைக்கு—நிரம்பிவருஞ்சரக்கு கட்டி நேர பாரத்துடன் கனத்துவரும்—தங்கிவரும் வழிக ளிலே—சற்றே தாமதங்க ளில்லாமல், (ஓட்டம்) எங் தெந்த திவாந்தரத்திலிருந்துஎண்ணிசொல்லிமுடியாத சரக்குகளைக்கொண்டுவருஞ்சவர்ன்னக் கிளிகொஞ்சும் பங்காளதேசம் பல்விதமாய் நெல்விளையும்பால்வடியு ஞ்சம்பா சிறுமணியும் பெருமணியுஞ் சிறுராசிநெல்லு நெராழிசம்பா மணக்கத்தைக் குங்குமச்சம்பா கொத்து முத்துச்சம்பா குடைமல்லிச்சம்பா மல்லிகைச்சம்பா மணமுள்ளச்சம்பா பங்காளதேசத்து வால்நீண்டநெல லும் அனுமந்தசம்பா அளவற்றசம்பா அந்தந்தேசத்தி ல் விளைந்துவருநெல்லுகடுகுசம்பாமிளகுசம்பாகற்பூர சம்பா கன்னியரிசியுடன் கறுப்புநெல்லரிசி சோனை ம ழைபொழியும்நல்லமலையாளதேசம் துள்வெள்ளை நெ ல்விளையுந் துய்ப்பைப்பூச்சம்பா ரசியமாபர்வதத்தில் வி ளைந்துவருஞ்சம்பா சமுத்திரத்தில் விளைந்துவருஞ் ச டைச்சம்பாநெல்லு சாதகோதாவரியில் விளைந்துவரு [illegible] த்தில்விளைந்துவருஞ்சம்பாகன் [illegible] நெல்லு ரீரங்கராயருக்கு

விளைந்துவரும்நெல்லு திருவரங்க நாயகிக்கு விளைந்
துவருஞ்சம்பா செம்பாளை பூம்பாளை சுகதாதி அரிசிக
ல்லுண்டைநெல்லுண்டை கார்போகத்தரிசிகட்டைப்ப
ரிசியுடன் கப்பலுள்ளதிலுசு மலைதுவரை சிறுதுவரை
கடலைபயிருளுந்து மற்றுமந்தகோதுமைநவதான்யஞ்
சோளம் கரிமஞ்சள்பொடிமஞ்சள் காரமுள்ளமஞ்சள்
கப்பமஞ்சள் சாயமஞ்சள் பங்காளமஞ்சள் மலைதேன்
கள் சிறுதேன்கள் காட்டிலுள்ளதேன்கள் நல்லவாய்
க்கினைசந்தசொரு தீவராட்சிகளும்தேன்பாகும்ணப்பா
கு சீமைகற்கண்டு சீனிச் சக்கரையோடு சேர்ந்தநல்ல
வெல்லம், ஈச்சம்பெல்லம் பனங்கற்கண்டு உள்ளிவெங்
காயம்காச்சிருக்கும் புளிச்சக்கைநீரடிமுத்து கள்களி
ப்பாக்குசிறுபாக்கு கல்பாணபாக்கு கற்றகாம்புநில்வத்
தி காட்டுகொம்பறக்கு கப்பாருகச்சோடு வெற்றிலை
கள்நல்ல கடல்முத்துசுண்ணாம்பு காரமுள்ள புகையி
லை சீரகம்பெருங்காயம் சுக்குப்பி ஓமம் செங்கதொரு
வெந்தயமும் கொத்துமல்லிவிளையும் கடுகுகள்மிளகு
கள் களர்ச்சிக்காய்யேலம் கடுக்காய்பூசிறுலவுங்கப்பட்
டையொடுபத்திரி சுக்குதிப்பிலிமோடி செவியமோடி
கோஷ்டம் சடாமாஞ்சி அதிமதுரம் கண்டுபாரங்கிபற்
றரத்தை சிறுநாக்கு சென்தூரதும்ராஷ்டம் சிறுகாவல்

Best copy available

பூவோடு குரோசானிஒம்ம் மற்றுமந்த வாய்விளங்கமா
ராட்டியமொக்கு பரங்கிசக்கைகருஞ்சீரகம் காட்டுசீர
கம்அதிமதுர லவுங்கப்பூ தாளிசப்பத்திரிஅக்கரா கார
ங்கள் கடுரோகணியும் கற்பூரதினுசுகள் கட்டிசாம்
பிராணிகர்ரமுடன்மெழுகுகள் கட்டிகுங்குலியம் வெ
ண்காரம்புலிகாரம் படிகாரம்நவாச்சாரம் இந்துப்பு பா
லுப்புசயிந்துப்பு லவணங்கள் துத்திநாதத்தோடுசெந்
தூரம்பச்சை சித்திரங்களெழுத நல்ல அரிதார நீலம்
ஏலக்காய் சாதிக்காய்வால்மிளகுலவுங்கம் ஏற்றமுள்ள
ஜாபத்திரி ஜாதிக்காய்ப்பட்டை குங்குமபூகஸ்தூரி
கோரோசனங்கள் குமுகுமென்று வர்ச்சிக்கும்பச்சை
கற்பூரம் சந்தனக்கட்டையின் சட்டங்கள்புனுகு சல
வை பன்னீர்கள் கதம்பபொடி அத்தர் பச்சிலிக்கிச்சிலி
கிழங்குகள்பில்லைபரிமளம் வீசிவரும் கஸ்தூரிமஞ்சள்
சந்தனத்தயிலங்கள் சாம்பிராணிவத்தி சம்பங்கித்தயி
லங்கள் கீலெண்ணெய்பிப்பாய் ஸ்ரீகந்தம் அகில்கட்
டை தேவதாரிகள் தீவிலுள்ள சரக்குகள்அபுரூபவஸ்
து மலைவேர்கள் மலையாள சஞ்சீவிநல்ல நிலவேம்பு வி
ஷமுஷ்டிவேம்புடனே சூர்ணம் செத்தவரை பிழைப்
பிக்குஞ்சஞ்சீவிமருந்து வெட்டுண்ட காயங்கள்ஒட்ட
நல்லமருந்து வாழாதபெண்களுக்கு வாழ்வுதருமருந்

துமைந்தரில்லாமலடிக்கு பிள்ளைதரு மருந்துகூடாத ஆணும்பெண்ணுங் கூட்டிவைக்குமருந்து குற்றங்கள் குறைதீர்க்குங்குணமுள்ளமருந்து ஆணுடனேபெண் பிரிந்துஅலைந்துகெட்ட பேரை ஆசையுடன் கூட்டி வைக்கும் அந்தரங்கமருந்து தேசாந்திரம்ஓடி திசை கெட்டகேரை சீக்கிரமாய்க்கொண்டு வந்துசேர்க்கு நல்லமருந்து இத்தனைதினுசுவகை இனிசொன்னதினு சுஇன்னமின்னஞ்சரக்குவகை பேர்சொல்லக்கேளும் பேர்சொல்லாசரக்குவகை ஆயிரங்கோடி பேர்சொல லும்சரக்குவகை பதினாயிரங்கோடி இத்தனைசரக்குவ கைஎடுத்துமேகட்டி இசைவுடனே கப்பலெல்லாமொ ருவழியேதள்ளி பத்திரமாய்வழிதனிலேதண்ணீரெல் லாந்தாண்டி - பலசரக்குகப்பல்வந்துசேர்ந்ததையா சுவாமி-ஏலேலோ.

இன்னமின்னம் சரக்குவகை—ஏற்றமுள்ள கப்ப லிலே—எண்ணிசொல்லமுடியாது—கொஞ்சம்சூட்ச முடன்சொல்லுகிறேன்—கப்பல்வருந்தினுசுகளை நம் மால் கணக்குசொல்லிமாளாது (சரூர்) பட்டுகள்தாபி தா பச்சைபட்டு மக்மல் பங்காளதேசத்து பர்க்களா துண்டு சாதாரதுப்பட்டி சலவையுருமால்கள் சரிகை நெய்தபுடவைகள் சாயமுள்ளதோம்பு மெத்தைக்குத் தகுந்த நல்ல மேல்பட்டு ஜாலர் விதவிதமாய் ரவை

பட்டுச்சல்லா வெண்சேலை மேலுக்கழகானதொருமாத
ளம்பூப்பட்டு மக்காவில்வெண்பட்டு மைமைசெங்காப்
பு பங்காளப்பட்டுடன் பஞ்சவர்ணச்சேலை அச்சமாய்க்
கட்டநல்ல பச்சைப்பீதாம்பரம் ஆர்த்தூரு பழவேற்காடு
பார்க்கு வன்னச்சேலை ஐதிராபாதரில்தாட்டிபத்திரிசே
லைமிஞ்சிமுடுக்கானதொரு கெஞ்சத்துசேலைமேலான
மேற்கத்திதேசத்துசேலை கெண்டுகோட்டைச்சேலை
கொண்டதொருகோடி கட்டாரிபட்டு புட்டாவன்னச்
சேலை மேலானசவுக்களி ரெட்டைகுட்டைக் குலிக்கி
கண்டதொருபுலியூரில் கொள்ளுநல்லசேலை நிலையங்கி
பாகைகள் நீண்டிருக்குங் குல்லா நிசாருடன் பாவா
டையுருமாலைசவுக்கம் நடுக்கட்டுரவிக்கைகள் நாலுவி
தம்சீட்டி நார்மடியுமடிசஞ்சு தேர்தைக்குங்கித்தான
ஜார்ஜ்ஜியுஞ்சகலாத்து சன்னதாவளையல் சட்டமுட
ன்துப்பட்டி பர்க்களாரேக்குபார்வைக்குமோகிக்கு
சீமைநூல்பட்டு பட்டணத்துபெண்களுக்குவாங்க நல்
லபுடவை முத்துகள் கல்லுகள் முத்துரத்நக்கெம்பு
மோகனமாலைக்ளுமுத்துசரமாலை நற்பவழம் சாதிலிங்
கம்நாலுவிதப்பச்சை நவரத்ந கல்லுகள் நாகரிகரவிக்
கைநவச்சிரங்கள்வைடூரியமாணிக்கநீலம்மஞ்சநிறம்கோ
மேதகம்புட்பராகங்கள் மஙிநதவிலைதருப்புகள்மாந்தா

ளிப்பச்சை மற்றுமந்தக் கப்பலிலே முத்துவந்ததினுசு
கோர்வை கொலுசுகளும் கையிலிடுமுத்து கோடான
கோடிகல்லிழைத்தபாட்டில் அடுக்குவளை தோள்வளை
யல் அதுகுண்டுவங்கி அழகான்பாசிபந்து கையிலிடுங்
கொலுசு கண்டசரப்பளிகள் கடல்முத்து மாலைகல்லி
ழைத்தபட்டயங்கழுத்திலிடுங்கண்டி ஆரங்கள்பதக்கங்
கள் அட்டிகைகள்நல்ல அதுகளுக்குமேலானமகரகண்
டிகைகள் காதுக்குநிறைந்திருக்கும்கத்திரி பாவளிகள்
கம்மலிடுஞ் சிமிக்கிசரம்காதுக்கசைவாளி ஆணிமுத்து
கல்லிழைத்த அடுக்குமூக்குகம்பி அழகானபுலாக்குஅ
ன்னமூக்குத்தி கலிகத்துராகல்லிழைத்த கட்டிபொடு
பட்டம்காதுக்குநேரானதிருநெற்றிசுட்டி சந்திரபிறை
சூரியபிறை தலைநிறைந்தசாமான் தளதளெனக்காந்தி
யுடன்தங்கஒட்டியாணம்பாதசரம்சுருள்கொலுசுசிலம்
புதண்டைபாட்டில் பத்துவிரல்மோதிரங்கள் மிஞ்சியு
டன்மெட்டுகாதுக்குசவுக்களிகள் கல்லிழைத்தசோடி
கண்டசரபதக்கங்கள்முத்திலாசிகாயம் கல்லிழைத்த
பெருங்கடுக்கன் மகரகுண்டலங்கள் மண்டலத்துசெ
னங்களுக்குவாங்க நல்லநகைகள் ஆபரணவகையெல்
லாமணியணியாய்வைத்து அதற்கேற்றபெட்டிகள்பூட்
டுகள்சாவிமோராவிராகன்சாரைக்கசிமேலானசீமை

Best copy available

யார்முத்திரைகள்ரூபாய்ஆதியிலேயுண்டான ஸ்ரீராமர் மேடைஅதுகளை சார்ந்தொருகாசுபணந்துட்டுஅரக்குமுத்திரைவைத்து அடையாளங்கட்டி அடையாளமாகவேகாசுபணமெல்லாம் அந்தந்தயிடத்தில் பத்திரங்கள்பண்ணிசிறுமுத்து பெறுமுத்து சிருராசிமுத்து தூரத்தில் விளைந்துவருஞ்சுண்டக்காய்முத்து பருத்தமுத்துபெருத்தமுத்துபவழநிறமுத்துபம்பாய் சீமையிலேவிளைந்துவருமுத்து கடைந்தமுத்து உருண்டமுத்துகட்டாணிமுத்து கருங்கடலில்விளைந்துவரும் காந்தியுள்ளமுத்து வாளிமுத்துநீலமுத்துவார்கடைமுத்து வையகத்துசென்னங்களுக்கு வாங்கநல்லமுத்துஒட்டிமுத்து தந்தமுத்துசுட்டிமுத்துநல்ல ஒப்பில்லாமாணிக்க ஜீவரத்தினங்கள்கோவர்த்தனகிரியில் வாங்கிவந்தமுத்துகோபாலகிருஷ்ணனுக்கு சாத்தநல்லமுத்துஅயோத்தியாபுரியில் வாங்கிவந்தமுத்து அபிராமலட்சமணருக்கு சாத்தநல்லமுத்து காசிதேசத்தில்வாங்கிவந்தமுத்துகனமானவர்த்தகர்கள் விலைமதித்தமுத்து பரதபுரிசீமையிலே வாரிவந்தவச்சிரம் பலமானவர்த்தகர்க விலைமதித்தவச்சிரம் குடகுதேசத்தில்வாங்கிவந்த கெம்புகோடானவர்த்தகர்கள் விலைமதித்தகெம்பு டில்லிதேசத்தில் வாங்கிவந்தபச்சை தேசத்துவர்த்தகர்கள்

விலேமதித்துபச்சை நாலுதேசத்தில் வாங்கிவந்தரத்தி
னம்நகர் சென்னபட்டணத்துதுறைவந்திறங்க தங்கக
ட்டிவெள்ளிகட்டித்தனிதனியாய் வரவேதாம்பரம்வெ
கலம் பித்தளே தூராக்கள் இரும்பு சட்டமாய்க்கட்டி
யெழுகுகம்பி நல்லஇதுகளேச்சார்ந்ததொரு தண்ட
வாளங்கள்சீமைமண்சாடிகள் சின்னசின்னகுப்பி சீசா
க்கள்வளேயோடுபீங்கான்கள்கிண்ணி திராவகம்பிராந்
திகள் சாராயபீப்பாய் தனித்தனியாயந்தந்தஇடங்களி
லேவைத்து பச்சைகள்நீலம் குளோப்புகண்ணுடி பச்
சையில்பெரிதான பன்னீருகுப்பி கண்ணுடிகதவுகள்
கைப்பெட்டிமேஜைகவுசிகள் குர்ச்சிகள்கட்டிலொடு
தொட்டில் மெத்தைகள்திண்டுகள் பில்லேதலேக்காணி
விதவிதமாய்மேற்கட்டு போகுந்துரைசாமான் மெழுகு
சீலேகூடாரமேக்குகள்வேம்பு விதவிதமாய் சிமைகாய்
குல்லாக்கள்சொக்காய் அடுக்குவத்திமெழுகுவத்தி அ
தற்கேற்றபீடங்கள் அலங்காரகூடங்கள்மெழுக்குவத்
திராந்தல்ககனவிளக்கதிகோடி காந்தியுள்ளவிளக்கு க
ண்ணுக்குஅழகான ரசகுண்டுவரிசை சதருக்கு அழ
கானசாயபொம்மைகளும் சார்ந்திருக்கநத்திண்டுகள் ச
ரிகைமேற்கட்டுதங்கமொடுவெள்ளித் தட்டுதாம்பாளம்
சதிருக்குஎற்றதொரு சாதிக்காய்கிரும்பு வால்மிளகு
ல்வுங்கமொடுவெண்ணமுள்ளபெட்டிவேற்றிலேமடித்துக்

கோர்க்கும் வெள்ளியிர்க்குகளும் விதம்விதமாய்ப்பன்
னீறு குப்பியொடுகிண்ணிபட்டுபாய்பிரப்பம்பாய்படுத்
திருக்கும்பாலிப்பாய் பட்டணத்து துரைகளுக்குக்கெ
ட்டிகாழும்யாப் பட்டுரெத்தனக்கம்பிளிகள் சோடுசமக்
காளம் பந்தலுக்குயேற்றதொரு மட்டப்பிரப்பம்பாய்
கண்ணாடிகாம்பிராகள்கட்டில்கள் சோபா காட்டினி
லேயுள்ள கலைமான்கள் கொம்பு கறுத்திருக்குஞ்சவுரி
நல்லவெண்சாமரங்கள் கிருஷ்ணசலப்பெட்டி புலித்
தோல்கள்நல்ல உட்கார்ந்துசெபம்பண்ணுஞ்சித்திரா
சனங்கள் பட்டுகுடை வெள்ளிகுடை பச்சைகுடை
நீலம்பவழகுடை முத்துக்குடை தங்ககுடைவெள்ளை
யீதிவருப்பாவாடை வெள்ளைத்தடிகள் வேடிக்கையர
கலேவ கப்பலிலவரவே காளிபனைவோலைகள் சிமைதடு
காசி பேனைக்கள் இங்கிபுட்டி பிரப்பந்தட்டு பீங்கான்
கோழிகள்சேவல் சுவடி பலகனைகள் சிறுராசிபெறு
[illegible] ஆதி வலசுனைகள் சங்குகள்பாவாடை சரக்குபித்த
ளைகள் சட்டமாய்க்கப்பலிலேதிட்டமாய்க்கட்டி அவ்
டல்டக்ஷமிபொழியும் ஆனந்தக்கப்பல் அளவற்றபாக்கி
யங்கள் குறைவற்றசெல்வம் நித்தியலட்சுமிபொழியுந்
திருவல்லிக்கேணி நினைக்கவரங்கொடுப்பாளந்த வேத
வல்லித்தாயார் இஷ்டமுள்ள லட்சுமிகடாட்சத்தினு

லே ஏற்றமுள்ளகப்பல்வந்து சேர்ந்ததையா சுவாமி ஏலேலேலா. (ங)

தார்குழலாள்கப்பலிலே—நல்ல சஞ்சிவிமருந்து வகை—வையகத்துஜனங்களுக்கு—நல்ல வியாதியறு மருந்துவகை—பூமியிலே ஜனங்களுக்கு—நல்ல பேரா னகுஞ்இலைதினுசு(சரூர்) பேரானரசவர்தம்பச்சிலை கள் தினுசுபெருவியாதிரோகமறுஞ் சஞ்சிவிமருந்துக்ஷ யரோகந்திமிர்வாய்வுதனுர் வாயுரோகம் கருமேகம்கா மாலைமார்நோவுகுன்மம்கண்குருடுசெவிடுகளகால்நொ ண்டிமிடங்கள் கண்காயப்படலங்கள்வாங்குநல்லமரு ந்து மண்டையிடி தொண்டைகட்டுமகத்தான ரோகம் மாளாதவியாதிகள் தீர்க்கநல்லமருந்துதிக்குத்தெரியா துநிசைகெட்டபேர்க்கு திவியஞ்சனம் நல்லசிமைதயி லங்கள் தேசத்துசனங்களுக்கு ஜெயமுள்ளமருநது தேகமெல்லாஞ்சுத்தமாய்ழுக்குதருமருந்து உலகத்து ஜனங்களுக்கு உபகாரமருந்து ஒருநாளும்வியாதிகள் வாராதமருந்துமனிதற்குஅசிமையில்சொரணைகெட்ட பேர்க்கு மதனகாமேசா அவிழ்தகஞ்சாக்கள் குலகந்து வில்வாதி லேகியங்கள்யாவும் கீழ்நாடுமேல்நாடு பேர் பெற்றமருந்துமருந்துவகைதினுசெல்லாம் வகைவகை

யாய்வைத்து மற்றுமந்தகப்பலிலேஆழமட்டுஞ்சாமான் கதவுகுழை யிரும்புசட்டம்கைபிடிகள் வளையம்கட்டிலுக்கும்தொட்டிலுக்கும் மூலசட்டசாமான் தலைக்கடைக்கதவுகள் கைப்பிடிக்குழைகள் வையிரத்தூண்கம்பங்கள் வெண்கலப்பட்டங்கள் சாரங்கள்தயிலங்கள் சங்கிலிகள்குப்பி தாள்வாரப்பெட்டிக்கு நெடுப்பூட்டு சாவி காடைவிளக்குகள்கைவிளக்குநல்ல கலியாணபந்தலுக்குயேற்றகுத்துவிளக்குதூங்காவிளக்குகள் தூங்குமலைகொலுசு தொட்டிலுக்குசங்கிலிகள் தோசைகல்லடுப்பு மண்ணுலுறுவான வாணய்கரண்டிமண்வெட்டிகள்நல்ல வெட்டுசந்தாலிபிஸ்தோல்துப்பாக்கிகள் பீரங்கிகுண்டு பல்லயம்யீட்டிகள் பாங்குகட்டாரி கெடியாரமாணிக்கம் கும்பினிகள் பாருகணக்குவகைது கைசொல்ல இட்டசம்பிரதிகள் ஆயுதங்கன்திரள்அலைமான்துருப்பு ஆழத்தின்மீதெரிய நச்சுகுழல் கொம்பு ஆனைகள் குதிரைகள் ஆயிரங்காலாள் ஆந்தோளிமேனக்கள் பல்லாக்குடோலி கோதரங்கள் கூண்டு வண்டி சக்கரங்கள் சட்டம் குதிரைகட்டு சாரட்டு தண்டிகைகளோடு மான்களொடுமயிலுகள் மாடப்புறுவும்

மைனாக்கள்பாத்துகள் பஞ்சவர்னக் கிளிகள் பால்கற
க்கநல்ல பசுக்களோடெருமை பச்சை வெண்ணெய்
கடைந்தெடுக்கமரங்களொடுமத்தும்சீமையெலிபெருச்
சாளி சிறுத்தைகொடுமுயல்கள் தேவாங்குகருங்குரங்
குசிறந்தபூனைகளும் செந்நாய்கரடிசிவங்கிகொண்டமு
யலும் சீமைநாய் வேட்டைநாய் இன்னமின்னஞ்சாதி
கடம்பைகள்உடும்புகள் கோவேறு கழுதை கண்ணுக்
குநிகரானநீர்மனுஷஜாதி விதவிதமாய்கப்பலிலே வே
டிக்கையாக வேகமுடன்கப்பலிலேவிசையோட்டம்வ
ரவேசிறுமீன்கள் பெறுமீன்கள் சிதறியங்கேயோட ந
லைபோலமீன்களெல்லாம் வந்தங்கேநிற்க தவுட்டுமர்வு
தான்கலந்து சமைத்தகொழுகட்டைதாம்திங்களில்லா
மல் எடுத்துமுன்னேபோட்டு அலைகடல்வழியெல்லா
ம் ஒருநொடியில்தாண்டிஆனந்த கப்பல்வந்து சேர்ந்த
தையாசுவாமி ஏலேலோ. (௩)

சங்கயமாபர்வதத்தில்—நல்ல சந்தனத்தால்சேர்
ந்தகப்பல்—மண்டலத்துஜனங்களுக்கு — நல்லமாளி
கைக்கு மாதினுசு—பட்டணத்துஜெனங்களுக்கு—நல்ல

பலவிதமாம்பழதினுசு (சரூர்) சதுர்கட்குநதிரானஎலு மிச்சம்பழங்கள் சாதிநார்த்தம்பழச் சக்கரையன்றுசி செவ்வாழப்பழக்குலைகள் சேர்நதரஸ்தாளி செவ்விள நீர்சீமையத்திப்பழங்கள் கிளிமூக்குமாம்பழம் மணியி லாக்கிச்சிலி வகையானமாதளம் பழங்களொடு தினுசு சீத்தாப்பலாப்பழமும்சொகுசானசீனி செடிநார்த்தை கொடிநார்த்தைசீமைகிச்சிலிகள் கொய்யாப்பழம்நல்ல கொத்துத்திராட்சிபழம் கொடிதனில்விட்டுவருங் கட் டுமாம்பழங்கள் பேரீச்சம்பழம்நல்ல பருப்புகற்கண்டு பேரானகச்சூரிகாய்களொடுதினுசு பட்டாணிமுந்திரி ப்பருப்புகள்தினுசு பழவகை தினுசெல்லாம் விதவித மாய் வைத்து பங்காளகப்பலிலே பணியாரதினுசும் தொட்டேப்பால் மனோகரம்தேன்குழல்பூரி தள்ளுமந்த அதிரசம் பாற்குழம்புலட்டு சோமாசியென்பது மேனி யதுவாகும் தின்னும்வகைபலகாரமின்னமின்னங்கொ ண்டுசகிபிண்டபிமனுக்குசர்க்கரைமிட்டாயும் சாரமு ள்ளபாலன்னக தயிர்வெண்ணெய்பாலும் புளியோரை தத்யானம்பொங்கல்வடைதோசைபோகுமரம்அடிசல செய்யும்இட்டிலிகள்நல்லசர்க்கரான்னங்களொடுமுள

கோரைவுண்டை அக்காரவடிசில்கள் பங்காளபாத்து
வேதவல்லித்தாயார் அடிசில்செய்யும்வகையை, விதவி
தமாய்இன்னதென்று கணக்கிடப்போமோபார்த்தசார
திதேவி அடிசில்செய்யும்வகையைபணியாரமின்னதெ
ன்றுகணக்கிடப்போமோ பணியாரவகைதினுசுபழதி
னுசுவகைகள் பரிமளங்கள்வீசிவரும் புஷ்பவிதசாதி
சம்பங்கி புஷ்பங்கள்சாதிமல்லிகைகள் சரங்களொடு
மாலைகட்டி குருவிவேர்தவனம் பன்னிருபுஷ்பங்கள்ப
ந்திபுஷ்பங்கள் பட்டுசாமந்திகள் பலவிதங்கள்சல்லி
செண்பகப்பூநல்ல செங்கழுநீராம்பல் சிறுசண்பகத்
தோடு சேர்ந்தவனமல்லி நீலவர்ன புஷ்பங்கள் நீண்ட
விருவாட்சி மேலானசுரபுன்னை முல்லைசெந்தாழை பு
ஷ்பவகை ஆயிரங்கள்பொட்டணங்கள்கட்டிபேர்பெற்
றகப்பலிலேஇன்னமின்னந்தினுசு கல்தேக்கு நெல்தே
க்கு காட்டிலுள்ளமரங்கள் கரிவோடுஇரிவோடு கருப்
புமரஞ்சாதி வெண்தேக்குபூந்தேக்கு வெட்பாலைமரங்
கள் வேப்பைமரம்நாவல்மரம் காட்டிலுப்பைமரங்கள்
சிறுவேங்கை பெறுவேங்கை சீமைபனைமரங்கள் சேர்
ந்ததொருவயிரங்களான நல்லபட்டை மச்சுகட்டுமாளி
கைக்குஅச்சுவட்டம்பலகை மதனகாப் புள்ளிசட்டம்
மாதிரிப்பலகை குதிரைபட்டை குருவிக்கால் குத்துக்

கால சட்டம்கூடத்துக்கம்பங்கள் சரங்களொடு தூலம்
வெழல்கட்டுத்தாவாரங்கள் வாசற்கதவு மாளிகைக்கு
நல்லநல்லவகைவகையாய்மரங்கள் ஈட்டிகள் கவ்வா
ட்டி பலஆரைகதவு கீழ்மெத்தைமேல்மெத்தை தாங்கு
நல்லசாரங்கள் அலமார்க்கதவுகள் ஆள்களுக்குமணை
கள் அழகானவிசுபலகை நாற்காலிமணைகள் மரங்கள்
வகைதினுசெல்லாம் வகைவகையாய்வைத்து மகாகன
மாய்கப்பலிலே வாத்தியங்கள் கோஷ்டம் முகவீணை
நாகசரம் விருதுகள்பேரிமேளமோடு தாளங்கள்விருது
சின்னங்கள் தாளமொடுமத்தளம் தமருவாத்தியங்கள்
இதுகளுக்குமேலான கிடுகிடுவாத்தியங்கள் காளாஞ்சி
துத்தாரி கனகதப்பட்டை பிள்ளாங்குழல்நாதம்பிட்
டில்வாத்தியங்கள் பெருகாளேஎக்காளே சாரங்கிவாத்
தியும்பாம்புநாகச்சரம் பதினெட்டுவாத்தியம் பாகவத
கோஷ்டங்கள் சங்கீதகீர்த்தனம் வீணையொடுசின்னங்
கள் வேதாந்தவேதியங்கள் தாம்தாமென்றுகப்பலிலே
சட்டமுடன்வரவே அதிரவேட்டுகீல்புருசுஆகாசபா
ணம்அழகானமத்தாப்பு ஐந்துதலைபாணம் பொரிபாண
ம் வெடிபாணம்இடிபாணவித்தை, புஷ்பபாணம்நல்ல
கப்பல்பாணங்கள் சுழல்பாணம் உழல்பாணம்—சீறிவ
ரும்பாணம் சீமையில்செய்துவரும் பலவிதபாணங்கள்

கம்பபாணம் நல்ல கையில்விடும்பாணம் காந்தியுள்ள
நட்சத்திர பாணங்கள்தினுசு— நீலவர்ன பாணமொடு
சூரியபாணங்கள் நீரியெனப் பேரிவரும்—தவளை பா
ணங்கள் பாணவகைதினுசெல்லாம்—பத்திரமாவைத்
துபாங்கானகப்பலிலேபலதேசச்சரக்குகொச்சிதேசம்
நல்லகுடகுதேசம் கோகிலபுரதங்கள் கோபுரங்கள்
வங்கணாறு கன்னடகர்ணுடதேசம்காஞ்சிபுரம்நல்லகாவே
ரிதீர்த்தம்கண்ணூறுபாயும்நல்ல—சோழதேசங்கள் ம
லையாளமொடுமதுரை நெற்றுதேசங்கள் தஞ்சையோ
டு திருநெல்வேலியொடுசீமை மண்டலங்கள் துண்
டீரநகரங்கள் தேசம் குற்றாலங்குறநாடு கும்பகோண
தேசம் கோதாவரிதீரங்கொண்ட கட்டிசீமைஏபாளம்
நேபாளபங்காளதேசம் வாய்சொல்லு தெரியாதமாரு
வாடிதேசம் இராச்சியத்தில்செழிப்புள்ள மைசூருதே
சம் நடுச்சோழமண்டலம்நாகரிகாஞ்சி அங்கதேசம்
நல்ல வங்கதேசங்கள் அதுகட்குமேலான இன்னமின்
னந்தேசம் காசிதேசம்நல்லகலிங்கதேசங்கள் கன்ன
றுபாயும்நல்லகல்கத்தாசீமை டில்லிதேசம்நல்ல சிந்து
தேசங்கள் திக்குதெரியாததொரு ராணிதேசங்கள் து
வாருகப்புரிநல்லசேதராபுரமும் வாரணுகுருட்சேதி
ரவடம்துவாரபத்திரி ரங்கரோத்திரி நல்லகண்டகோதி

ரம் கீழ்நாடுமேல்நாடுதென்னாடுதேசம்பற்பலதேசதித் ல்சரக்குகள் கொண்டு திக்குதிக்காய் கப்பலெல்லாம் ஒருவழியாய்ச்சேர்ந்து ஸ்ரீராமாஜெயமென்று எழுமபி யே கப்பல் துடுப்புகள் நாட்டியவாள் ஜலங்களையொ துக்கி சீர்பொழியுங்கப்பல்வருஞ்சேதியைக்கேட்டுதிக் குதிக்குகள்தோறும்வேட்டுகள்போட்டு சிங்கக்கொடி கட்டி சிங்காரமாக ஜெயமுள்ள கப்பல்வந்து சேர்ந்த தையா சுவாமி ஏலேலோ. ௫

உலகமெலாம் செற்றெடுத்த—அம்பாள் உத்தமி யாள்பத்தினியே—மகிமையுடன் தேசமெல்லாம் வந்த ருளும்கப்பலிலே (சளூர்) மலையாளங்கோங்குடன் நி லைசேருமுடனே மைசூர்களத்தூரு வந்தே மகிழ்ந்து தவமானகோயிலடி இளங்காடு நேமே கண்டியூர் திருக் காடுபள்ளி செம்மலைநை கோலமுள்ளதிருவையாறுதி ருத்தாலூர் துறையூர்கொஞ்சுமபசும் பெதிர்கோயில் தஞ்சைநகர்கண்டு தன்னவன்மைகாவல்உண்மையுமாய் பார்த்து தானுமாய்பாய்மரம்மூன்றுபதினாறு நன்மை யென்றுந்தேனுலேசீகிகலப்புகற்பமுடன் சொற்பமாய் சொற்பமாய்ப்பாரு தந்திரம்தானநலல துப்பாக்கிகட் டி சீராய்க்டுக்கட்டு சொகுசுடனேகட்டி தூங்கும்ஞ்ச

சப்ரமூடன் கட்டினார்தாவி அந்தந்ததேசத்துக் கதிப
திகளாகிஇஷ்டாங்கமாக்கொண்டுசாஷ்டாங்கமாய்வர
ச்சேச (சுருக்கச்சொல்) பந்தியுடனேவந்துஇங்கிலீசுபி
ராஞ்சு லாட்டுமேலாட்டு அரைநாளைப் பூட்டு நீரில்
மேல்நெருப்புகொண்டே பணிந்ததொரு பீரங்கிதீர்த்
து குமுதமுடன்கப்பலிது சமுகநிரைகண்டுதொண்ட
ரெல்லாம் புகழும்வேதவல்லித்தாயார் துரிதமுள்ளகப்
பலில் தப்பாமல் வருகுதப்பா (ஏலேலோ) ௬

அதிபதியாள் அன்னக்கொடி—அம்பாள் தரும
நிதிபுண்யவதி=அம்பால் கப்பல் கடலோட்டம்—தத்
தையா அரைகொடியில் வருகுதிங்கே (சரூர்) அந்தி
யேசோழமண்டலமதுகடந்து அந்நததேவ ஸ்தலங்
களதுகண்டு கந்தேதமழைபொழியும் அகமாறுமாதம் க
னத்ததொருநெல்விளையும் மற்றுமுள்ள சிமை அவ்வூ
ருகப்பலிது ஆனந்தமாகஅன்புடனேசுத்தியல்லோ எ
ல்லைதுறைதாண்டி இருகாதுகொப்புஇரட்டை ஒட்டி
யாணம் இலட்சம்பொன் பெற்றதொரு பச்சைவடம்
கொண்டு கொண்டுவந்தம்மனுக்கு கொடுத்தே பணிந்
து கோலமுள்ள கப்பலுக்குமேலும்வழிகாட்டிசீலமுன்
ன கப்பலிதுவடிநெல்லூர்தாண்டிசென்னபட்டண
ம் துறைவந்து சேர்ந்ததையாசுவாமி ஏலேலோ. ௭

உத்தமியாள் வேதவல்லி—பத்தினியாள் கப்பலிது சித்தமுள்ளபட்டணத்தில—சேர்ந்ததென்று தான்பாட (சரூர்) உலகமாதாவே உத்தமிகாமாட்சி உமையவள் தன்னருள் உத்தாரம்பெற்று அமையுமிந்தகப்பலுக்கு சமயமதுபார்த்து ஆகாரங்கண்டெடுத்து அடித்தட்டில்சேர்த்து ஸ்ரீகாரங்கண்டெடுத்து சிக்கந்திருப்பிகாகாரங்கண்டெடுத்து கப்பிகயிர்கட்டி நமசிவாயங்கொண்டு நாங்கூரம்பாய்ச்சி நாலுவேதக்காற் பிரங்கிபேற்ற் அஷ்டாட்சரத்திலே காற்றுகளும்பாய அம்மனுடன் கப்பலிது விஸ்தாரமாக அன்பாக்கணபதியை முன்பாக வைத்து அந்தமுடன் கப்பல்வந்து சேர்ந்ததையா சுவாமி ஏலேலோ. அ

கப்பலென்றால் கப்பலிது—நல்லகனமுடையகப்பலிது—கப்பல்வரும் பருவதிலல்—ஜலங்கள் கரைபுரண்டுகுமிளமிடும் இருகரையு நீர்பெருகி—தத்தையாஏகசலம் வந்திடுமாம் வேதவல்லீ யதுவறிந்து அம்மன் கால்வரிசை யெச்சரித்தாள் (சரூர்) காவேரிதானறிந்து வேதவல்லித்தாய்மேல கடாட்சம் வைத்துகப்பல் தனை துறைகொணர்ந்துசேர்க்கதுறைபுரண்டு காவேரி நெவகு வன்றாய்வாரீவ அப்[illegible]ணு தனமகிமை ஆரறி[illegible]

ரென்று ஆதிரங்கர்சந்நிதிக்குப் பின்பாகவேதான் அலை வந்துமோதவே கரைதனிலேயொதுக்கிஉத்தரபாரிசம் ஒருபக்கந்திரும்பிஓங்காரமாகவே உருண்டைமணல் வாரிசத்தமிட்டுத்தத்தளித்துதான்புரண்டுகப்பல் சதா காலமம்மனை சிந்தைதனிலெண்ணி வேதவல்லித்தாயா ஸாதியானமதுபண்ணி வேகமுடன் இங்குவந்தகப்பலி தகண்டீர் ஏலேலோ. ௬

வாழியவே வாழியவே—ரத்ந மகமேருவாழிய வே—ஈஸ்வரரும்பார்வதியும்—தத்தைதயா இன்பமு டன்வாழியவே—மகாவிஷ்ணுவும் லட்சுமியும்—கோ விந்தா மண்டலத்தில் வாழியவே பிர்மாவும் சரஸ் வதியும்—தத்தைதயா பூமிதனில்வாழியவே (சரூர்) தே வேந்திரன் இந்திராணி தேவர்களும்வாழி திறமுள்ள முனிவர்களும் சித்தர்களும்வாழி முப்பத்துமுக்கோடி ம்தவர்களும்வாழி முதலானநாரதரும் கிம்புருடர்வா ழி நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுமே வாழி நலமுள் ளகருடகாந்தருவர்களும்வாழி விக்கினவிநாயகருமித் தமிகவாழி வேலவரும்பத்தினிக ளிருவர்களும் வாழி ஸ்ரீரங்கநாயகரும் ரங்கநாயகியும் சீவகாரணரானபார் த்தசாரதியும்சீரானவேதவல்லித்தாயாரும்வாழிமேலா

னசென்னைபுரி ஆளுகின்றதுரைகள் மென்மேலும் எந்நாளும்வாழிமிகவாழி சூப்ரீங்கோர்ட்டிலுள்ள துரைகளெல்லாம்வாழி துருப்பிடித்து வழக்கெடுக்கும் எல்லட்டும் வாழி இன்னஞ்சிலதேசங்களை ஆளுகின்ற ராஜர் இணையில்லாத செல்வங்கள் பெற்றுமவர் வாழி சிலமுள்ளகப்பல்கவி கற்றவர்கள்கேட்டோர் சிறப்பாய் படிப்போர்கள் ஜெயம்பெற்றுவாழி மேலானஇக்கதை அச்சிதனி லிட்டோர் மேன்மேலுக் எந்நாளும் வாழி மிகவாழி.

ஏலேலோ குருபாதம்—அம்பாள்
ஏல்லோ குருபாதம்.

பலசரக்குஏலப்பாட்டு

முற்றிற்று.